**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006**

**இடைநிலை/மேல்நிலை இரண்டாமாண்டு சிறப்புத் துணைப் பொதுத்தேர்வு, ஜூன்/ஜூலை 2018 அசல் மதிப்பெண் சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல் குறித்த செய்திக்குறிப்பு**

நடைபெற்ற ஜூன்/ஜூலை 2018 மேல்நிலை இரண்டாமாண்டு சிறப்புத் துணைப் பொதுத்தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு **24.07.2018**–லிருந்தும், இடைநிலை சிறப்புத் துணைப் பொதுத்தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு **01.08.2018**–லிருந்தும் தற்காலிக மதிப்பெண் சான்றிதழை (Provisional Certificate) தேர்வர்கள் தாங்களே ஆன்–லைன் மூலம் பதிவிறக்கம் செய்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

தற்போது, மேல்நிலைத் தேர்வெழுதிய (மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு உட்பட) தேர்வர்களும் மற்றும் இடைநிலைத் தேர்வெழுதிய (மறுகூட்டல் உட்பட) தேர்வர்களும் தங்களது அசல் மதிப்பெண் சான்றிதழ்களை **03.10.2018** (புதன்கிழமை) முதல், அவர்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்களிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

இதில் நிரந்தர பதிவெண் (Permanent Register Number) கொண்ட தேர்வர்கள், இதற்கு முந்தைய பருவங்களில் அவர்கள் தேர்ச்சி பெறாத பாடங்களை ஜூன்/ஜூலை 2018 சிறப்புத் துணைப் பொதுத் தேர்வில் தேர்வெழுதி, அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பின், அவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ்களும், முழுமையாக தேர்ச்சி பெறாதவர்களுக்கு அவர்கள் தேர்வெழுதிய பாடங்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**தேதி:** 26.09.2018.
**இடம்:** சென்னை– 600 006.